Registered as a Newspaper

பக்கங்கள் 16

விலை ரூ. 50

புதன் பொய்கை

# உதயன்

சுடர் : 38
கதிர் : 151

புதன்கிழமை 26 ஏப்ரல் 2023

சித்திரை 13 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# தமிழர் தாயகம் நேற்று முற்றாக முடக்கம்!

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 26**

**தமிழர் தாயகத்தில் இடம்பெறும் சிங்கள - பௌத்த பேரினவாத அடக்குமுறைகளுக்கு எதிராகவும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகவும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த கடையடைப்பால் தமிழர் தாயகம் நேற்று முற்றாக முடங்கியது.** »15

## மின்னல் தாக்கி பெண் இறப்பு!

மன்னர், ஏப். 26
மன்னார், மடு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட »15



வலுக்கின்றது எதிர்ப்பு

## பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை தாமதிக்க அரசாங்கம் திட்டம்

கொழும்பு, ஏப். 26
பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராக தமிழர் தாயகத்தில் பொதுமுடக்கம் மேற் »15

## போதை மாத்திரையுடன் புத்தூரில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 26
புத்தூர் மேற்கு வன்னியசிங்கம் பகுதியில், போதை மாத்திரைகளுடன் நபரொருவர் »15

## எரிபொருள் ஒதுக்கீடு மாற்றங்கள் இல்லை

பண்டிகைக்காலம் போல் தொடரும்

கொழும்பு, ஏப். 26
பண்டிகைக் காலத்தில் அதிகரிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீடு மறுஅறிவித்தல் வரை »15

## தந்தை செல்வாவுக்கு நினைவுத் தூபி

யாழ்ப்பாணம், ஏப். 26
தந்தை செல்வாவின் 46ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வும், நினைவுத்தூபி திரைநீக்கமும் தெல்லிப்பழை சேமக்காலையில் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
ஓய்வுநிலை பேராயரும், தந்தைசெல்வா அறங்காவல் நினைவுக் குழுவின் தலைவருமான கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் இந்த »15


## சா/த. பரீட்சை வேண்டாம் அனைவருக்கும் உயர்தரம்!

அரசாங்கத்திடம் டலஸ் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 26
க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையை இந்த வருடம் நடத்தாமல், அனைத்து மாணவர்களும் உயர்தரப் பரீட்சையைத் தொடர்வதற்குத் தகுதியானவர்கள் என்று அறிவிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும கோரிக்கை விடுத்துள்ளார். »15

## நெடுந்தீவுப் படுகொலைகள் சந்தேகநபருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், ஏப். 26
நெடுந்தீவில் ஐந்து முதியவர்களை படுகொலை செய்து, 100 வயதான மூதாட்டிக்கு கடும் »15







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவருக்கு அச்சுறுத்தல்; சேவைகள் இடைநிறுத்தம்!

## புத்தூர் மருத்துவமனை தீர்மானம்

**யாழ்ப்பாணம், ஏப். 26**
**புத்தூர் ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவு மருத்துவருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலையடுத்து மருத்துவ சேவைகளை இடைநிறுத்த மருத்துவமனை தீர்மானித்துள்ளது.**

கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை புத்தூர் சந்தியில் அமைக்கப்பட்ட தாகசாந்தி நிலையத்தில் ஒலி பெருக்கி பொருத்தப்பட்டு பெரிய சத்தமாகப் பாடல்கள் இசைக்கப்பட்டன.
இதனால் தமது சேவைகளுக்கு இடையூறு ஏற்படுவதாக மருத்துவர், தாகசாந்தி நிலைய ஏற்பாட்டாளர்களுக்குத் தெரிவித்துள்ளார்.
எனினும் மருத்துவரின் கருத்தைப் பொருட்படுத்தாத அவர்கள் தொடர்ச்சியாக பெரிய சத்தமாகப் பாடல்களை இசைக்கவிட்டனர்.
அதன்பின்னர் குழுவொன்றால் மருத்துவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதுடன், அவரது அலுவலகத்துக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டபோதும் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்த நிலையிலேயே புத்தூர் ஆரம்ப சுகாதார பராமரிப்பு பிரிவின் மருத்துவ சேவைகளை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.
மருத்துவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தவர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தவேண்டும். அங்கு பணியாற்றும் ஊழியர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். அதன் பின்னரே புத்தூர் ஆரம்ப சுகாதார பராமரிப்பு பிரிவின் மருத்துவ சேவைகளை மீள ஆரம்பிக்கமுடியும் என்றும் மருத்துவமனை நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை இந்தச் சம்பவம் தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடமாகாண நிர்வாகம், பொலிஸ் உயர்மட்டத்துக்கு அறிவித்துள்ளது. (ஒ-14)

வயோதிபப் பெண் வீட்டினுள்

# கொள்ளையிட முயன்றவர் ஊரவரால் நையப்புடைப்பு


யாழ்ப்பாணம், ஏப். 26
வீட்டுக்குள் அத்துமீறிப் புகுந்து வயோதிபப் பெண்ணை அறைக்குள் பூட்டிவிட்டு கொள்ளையிட முயன்றவரை ஊரவர்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.
திருநெல்வேலியில் நேற்று இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
திருநெல்வேலியிலுள்ள ஒரு வீட்டினுள் அத்துமீறி நுழைந்த குறித்த நபர் அங்கு வசித்த வயோதிபப் பெண்ணை வீட்டின் அறையில் வைத்து பூட்டிவிட்டு வீட்டை சல்லடைபோட்டுத் தேடியுள்ளார்.
வயோபதிபப் பெண் கூக்குரலெழுப்பியதையடுத்து அங்கு அயலவர்கள் திரண்டபோது சந்தேகநபர் தப்பியோடியுள்ளார். ஊரவர்கள் அவரை மடக்கிப்பிடித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். அவரிடமிருந்து 25 ஆயிரம் ரூபா பணம் மற்றும் பித்தளைப் பொருள்களும் மீட்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.
மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-26)

# ஹெரோய்னுடன் மூன்று பேர் கைது!

கிளிநொச்சி, ஏப். 26
உயிர்கொல்லி ஹெரோய்னுடன் மூன்று நபர்கள் பளையில் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சந்தேகத்தின் அடிப்படையில் மூன்று நபர்களிடமும் பளை பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது, ஒருவரிடம் 35 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும், மற்றயவர்களிடமிருந்து 29 மில்லிகிராம் போதைப்பொருளுமாக 64 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது.
கைது செய்யப்பட்ட மூன்று பேரும் யாழ்.மாவட்டம், பளைஅரசர் கேணி மற்றும் வண்ணாங்கேணி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும், அவர்களை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14,113)

# மொட்டு - பீரிஸ் சமர் உக்கிரம்!

கொழும்பு, ஏப். 26
சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸுக்குமிடையிலான அரசியல் சமர் தற்போது உச்சமடைந்துள்ளது என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
கட்சியின் இந்த ஆண்டுக்கான பொதுக்கூட்டம் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தலைமையில் அண்மையில் இடம்பெற்றது
இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸுக்கு கட்சியின் செயலாளர் கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. ஆயினும் அவர் பங்கேற்க மறுத்துவிட்டார்.
அதனால் பொதுக்குழுக் கூட்டம் கட்சித் தவிசாளர் இன்றி நடைபெற்றது.
பின்னர் கட்சிக்கு புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. அதில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளராக பேராசிரியர் ஜீ.எல். பீரீஸுக்கு பதிலாக தோர்த்தவல தம்மரதன தேரர் கட்சியின் தலைவராக ஏகமனதாக நியமிக்கப்பட்டார்.
இந்தநிலையில் பெரமுன கட்சியின் சட்டபூர்வமான தவிசாளர் நானே. பொதுச்சபைக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் சட்டவலுவற்றவை. அவை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்படும் என பேராசிரியரான ஜீ.எல். பீரிஸ் சீறியுள்ளார்.
எனினும், பொதுச்சபைக் கூட்டம் சட்டபூர்வமானது என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் அறிவித்துள்ளார். (ச-44)



# சந்திரன் பூங்கா காணி சுவீகரிப்பில் இராணுவம்

## மக்கள் எதிர்ப்பு

கிளிநொச்சி, ஏப். 26
கிளிநொச்சி நகரப் பகுதியிலுள்ள சந்திரன் பூங்காவில் நேற்றுமுன்தினம் இராணுவத்தினர் மேற்கொண்ட அளவீட்டு நடவடிக்கைக்கு மக்கள் எதிர்ப்பு வெளியிட்டனர்.
கிளிநொச்சி நகர மையத்திலுள்ள சந்திரன் பூங்காவை இராணுவத்தினர் நீண்டகாலமாக கையகப்படுத்தி வைத்துள்ளனர்.
தற்போது அதனை சுவீகரிக்கும் முகமாக நிலஅளவைப் பணிகளில் படையினர் ஈடுபட்டுள்ளனர் என எதிர்ப்பில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். (ச-113)

# தவறான முடிவெடுத்து குடும்பஸ்தர் இறப்பு!

கிளிநொச்சி, ஏப். 26
பளை முகமாலை வடக்கில் தவறான முடிவெடுத்து குடும்பத்தலைவர் ஒரு வர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார் என்று பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
உயிரிழப்பு தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14,9)

# பொதுமுடக்கத்தின்போது இ.போ.ச. மீது கல்வீச்சு!



முல்லைத்தீவு, ஏப். 26
முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த முல்லைத்தீவுசாலைக்குச் சொந்தமான அரச பேருந்தின் மீது கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
வடக்கு - கிழக்கு தழுவி நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட பொது முடக்கத்தின்போது பயணித்த பேருந்தே செல்வபுரம் பகுதியில் கல் வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகியது.
தாக்குதலில் பேருந்தின் முன் கண்ணாடி சேதமடைந்துள்ளதுடன் பேருந்தின் சாரதியும் காயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.
சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள முல்லைத்தீவு பொலிஸார் முல்லைத்தீவு சாலையில் இருந்து செல்லும் அனைத்து பேருந்துகளுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கினர். (ச-19)


# புத்தாண்டன்று கத்திவெட்டு பிரதான சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 26
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டை சாவற்கட்டு பகுதியில் புதுவருட தினத்தன்று இடம்பெற்ற கத்திவெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
ஆனைக்கோட்டை பகுதியில் முற்பகைமை காரணமாக மேற்கொள்ளப்பட்ட கத்திவெட்டுச் சம்பவத்தில் தொடர்புடைய மூவர் முன்னர் கைதுசெய்யப்பட்டனர். சம்பவத்துடன் தொடர்புடைய 22 வயதுடைய பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
அவரிடமிருந்து சான்றுப்பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன என மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக சுதந்திரத்தைப் பறிக்கும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்

## போராட்டத்துக்கு அழைப்பு



**மன்னார், ஏப். 26**

**அரசால் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத தடைச்சட்டவரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி சந்தைக்கு முன் பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.**

இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு ஜனநாயகத் தின் நான்காவது தூணான ஊடகத்துறையை முடக்கும். ஊடகவியலாளர்கள் தங்களது கட மைகளை சுதந்திரமாக மேற்கொள்வது இந்தச் சட்டவரைவால் கேள்விக்குறியாக்கப்படும். இது ஒழிக்கப்படவேண்டியதொன்று. இதற்கெதிராக முன்னெடுக்கப்படவுள்ள இந்தப் போராட்டத்துக்கு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஊடக அமைப் புக்கள் ஒன்றிணைந்து ஆதரவுக்கரம் கோர்க்க வேண்டும் என கிளிநொச்சி ஊடக அமையம் அழைப்பு விடுத்துள்ளது. (ச-60)

### வவு.கட்டையர்குள பகுதியில்

# சட்டவிரோதமாக காடழிப்பு; அதிகாரிகள் தடுக்கவில்லை

## மக்கள் விசனம்

வவுனியா, ஏப். 26

வவுனியா, கட்டையர்குளம் பகுதியில் வன இலாகாவுக்குச் சொந்தமான 12 ஏக்கர் காட்டுப் பகுதி சட்டவிரோதமான முறையில் அழிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் காடழிப் புக்கு பொலிஸாரும் வனஇலாகா அதிகாரி களும் துணைபோகின்றனர் என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிராம மக்கள் மேலும் தெரிவிக்கையில், கடந்த சில நாள்களாக வவுனியா, ஈச்சங் குளம் கிராமஅலுவலர் பிரிவிலுள்ள கட்டை யர்குளம் பகுதியில் 12 ஏக்கர் காட்டுப்பகுதி அழிக்கப்பட்டு வருகின்றது. இதுகுறித்து அரச அதிகாரிகளுக்கு முறையிடப்பட்டபோ தும் காடழிப்பு நிறுத்தப்படவில்லை.

இந்தநிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழ மையன்றும் காடழிப்பு மற்றும் அதனுடன் இணைந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டபோது அதனைத் தடுத்து ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் கிராம மக்கள் முறைப்பாடு செய்தனர். பொலிஸாரும் காடழிப்புக்கு உடந்தையாக முறைப் பாட்டை பதிவுசெய்யவில்லை.

குறித்த பகுதி வரைபடத்தில் காட்டுப்பகுதி யாக உள்ளபோதும் எவருடைய அனும தியும் பெறாது காடழிப்பு இடம்பெறுகிறது. இதற்கு சில அதிகாரிகள் தமது அதிகா ரத்தை துஷ்பிரயோகம் செய்கின்றனர். இந் தச் சட்டவிரோத நடவடிக்கையை தடுத்து நிறுத்தவில்லை.

தற்போது இது தொடர்பில் வவுனியா பிரதேச செயலாளர், வவுனியா மாவட்ட செயலாளர், வனஇலாகா திணைக்களம் ஆகியவற்றுக்கும் எழுத்துமூல முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றனர். (ச-18)

# கொடுஞ் சட்டம் வந்தால் மாணவர் கிளர்ந்தெழுவர்

## யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 26

ஜனநாயக ரீதியில் போராடும் மாணவர் சமூகத் தின் கருத்துச் சுதந்திரத்தை பிடுங்கியெறிந்து பாரதூர விளைவை பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு ஏற்படுத்தும் இதனை நடைமுறைப் படுத்த ஆட்சியாளர்கள் முன்வந்தால் வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் மாணவர்கள் எழுச்சி கொள்வர்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அ.விஜயகுமார், பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்,

பயங்கரவாத தடைச்சட்டம் 44 ஆண்டு காலமாக மக்களை ஒடுக்க பயன்படுத்தப்படும் ஆயுதமாக மாற்றப்பட்டு ஆட்சியாளர்களால் பயன்படுத்தப் பட்டு வருகின்றது.

இந்தச் சட்டத்தை ஒழிப்பதாக சர்வதேசத்துக்கு காட்டி அதனை விடவும் கடுமையான சட்டவரைவு உருமாறி வரவிருக்கின்றது.

ஒரு மனிதன் சுதந்திரமாக ஜனநாயக ரீதியாக தன்னுடைய கருத்தை தெரிவிக்க இந்தச்சட்ட வரைவு தடைசெய்துள்ளது. அரசின் அடக்குமு றைகளை சுட்டிக்காட்டும் குரல் நசுக்கப்படும். மாணவர் சமூகத்துக்கு பாரதூரமான விளைவை ஏற்படுத்தும். போராடும் மாணவர்களை கைது செய்யும்.

நாடாளுமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள இந்தச் சட்டவரைவுக்கு ஆட்சியாளர்கள் ஆதர வளிக்கக் கூடாது. தொடர்ந்து இந்தச் சட்டவரைவு மீதான நகர்வுகளை ஆட்சியாளர்கள் முன்னெ டுத்தால் வடக்கு- கிழக்கு தழுவிய ரீதியில் பல் கலைக்கழக மாணவர்களால் மாபெரும் போராட் டம் வெடிக்கும் - என்றார். (ச)

# போதைப்பாவனையை ஒழிக்காமல் பொலிஸார் அசண்டையீனம்!

## புதுக்குடியிருப்பு கிராம மட்ட அமைப்புக்கள் குற்றச்சாட்டு

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் பொலிஸார் அசண்டையீனமாக செயற்படுகின்றனர் என கிராமமட்ட அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்துக் குட் பட்ட கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதி கள் பங்கேற்பில் போதைப்பொருள் தொடர்பான கலந் துரையாடல் நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு பிர தேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், பிரதேச மட்டத்தில் போதைப்பொருளின் பாவனையைக் கட்டுப்படுத் தும்வகையில் செயற்படுத்தப்படும் நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. இளையோரி டையே உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனை கள் துரிதமாக பரவலடைந்து வரும் நிலையில் கொலை, கொள்ளை உள்ளிட்ட பாதகச் செயல்க ளும் தலைதூக்கியுள்ளன. இதனைக் கட்டுப்படுத் துவதில் பொலிஸார் அசண்டையீனமாகச் செயற் படுகின்றனர் என்று கிராம மட்ட அமைப்புகள் சுட்டிக்காட்டின. (ச-19)




**சந்தனம் மிஞ்சினால் எங்கையோ தடவச் சொல்லுவினம். அதை மாதிரி எங்கட ஆக்களுக்கு காசு மெத்திப்போய், என்ன செய்ய வேணும், என்ன செய்யக்கூடாது எண்டு தெரியாமல் தலைகீழா நிக்கினம். முந்தி கலியாணம், கச்சேரி எண்டதுகளிலதான் எங்கட ஆக்கள் தங்கட பணப்பவரை எங்கட ஆக்கள் காட்டுவினம். ஆனால், இப்ப என்னெண்டால் செத்த வீடுகளிலையும் இந்த வியாதி வரத்தொடங்கிட்டுது.**

**முந்தியெல்லாம் செத்தவீடெண்டால், பாடைக்கும், விறகுக்கும், பெட்டிக்கும், எரிக்கிற வைக்கும், மேளத்துக்கும் தான் காசு. எங்கையேனும் அரிதிலும் அரிதா 'ஹேர்ஸ்' எண்ட செத்தவீட்டு வாகனம் பிடிப்பினம். அவ்வளவு தான் செலவு. ஆனால் இப்ப வழக்கமான செலவுகளோட வெடி, கொடி, ஹேர்ஸ், மேளம் பிடிச்சாலும் அதுக்குப் போட்டியா 'பாண்ட்' குரூப், சோடா, தண்ணீர்ப்போத்தல் எண்டு செத்தவீடு செய்தாலே 'என்ன இவ்வளவு சிம்பிளா செய்திட்டினம்?' எண்டு கேக்கிற அளவுக்கு நிலைமை மாறிட்டு. இதுகளுக்கே நாலைஞ்சு லட்சம் வேணும். சிம்பிளாச் செய்யிறதுக்கே இவ்வளவு செலவாகும் எண்டால், தடல்புடலா செத்தவீடு செய்தால் எவ்வளவு செலவாகும்?**

**வீட்டில இருந்து சுடலைவரைக்கும் (அது 10, 15 கிலோமீற்றரா இருந்தாலும்) நிலப் பாவாடை விரிக்கினம், பூமாலை சொரியினம், வாணவேடிக்கை காட்டுகினம் எண்டு பாத்தால் இப்ப குதிரை, யானை எல்லாம் கொண்டந்து, முந்தின சின்னமேளம் மாதிரி டான்ஸ்ஃகளும் ஆடி, செத்தவீட்டையே ஒரு கார்னிவெல் மாதிரி ஆக்குகினம் எங்கட ஆக்கள். 'அவையிட்ட காசு இருக்கு செய்யினம்' எண்டெல்லாம் இதுகளை விட ஏலாது. ஏனெண்டால் உயிரோட இருக்கேக்க தாய், தகப்பனை விட்டிட்டு வெளிநாட்டில இருந்திட்டு, அவை செத்த உடனை மட்டும் ஓடியந்து இப்பிடி செத்தவீட்டை களியாட்டமாக்கிறது எந்தவிதத்தில ஞாயம்? இப்பிடிக் கார்னிவெல் கொண்டாடுற காசைச் செலவழிச்சு, அந்தத் தாய், தகப்பனை தனிய இருக்க விடாமல் அடிக்கடி வந்து பார்த்து, கதைச்சிருந்தாலே அவையின்ர மனம் குளிர்ந்திருக்குமே. இன்னும் கொஞ்சக் காலம் இந்தச் சந்தோசத்தில இருந்திருப்பினம். அத விட்டிட்டு ஊருக்கு எழுப்பம் காட்டுறதால என்ன வரப்போகுது?**

**நடக்கிறதையெல்லாம் பாக்க இனிமேல் காசில்லாத ஆக்கள் சாகவும் ஏலாது போல.**



**- பட்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோபகிருது

## தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்




மற்றவர்களை எடைபோடுவதில் வல்லவர் நீங்கள். தலைமைப் பண்பும் அதிகம் உண்டு. உங்கள் ராசிக்கு 4ஆவது ராசியில் புத்தாண்டு பிறக்கிறது. பிரபலங்களின் பட்டியலில் இடம்பிடிப்பீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். கணவன் மனைவிக்குள் இணக்கமான சூழ்நிலை உண்டாகும். வீட்டில் சுபகாரியங்கள் இனிதே நடக்கும்.

14.4.2023 முதல் 21.4.2023 வரை 6ல் நிற்கும் குரு சற்றே அலைக்கழிப்பார். 22.4.23 முதல் வருடம் முடியும் வரை அவர் 7ல் அமர்ந்து உங்கள் ராசியைப் பார்க்க இருப்பதால், விபரீத ராஜயோகம் உண்டாகும். குடும்பத்தில் சந்தோஷம் பெருகும்.

14.4.2023 முதல் 25.8.2023 வரை மற்றும் 20.12.2023 முதல் வருடம் முடியும் வரை சனி 5ல் நுழைவதால் பிள்ளைகளின் வருங்காலம் குறித்த கவலைகள் வரக்கூடும். மகளின் திருமணத்துக்காக கடன் வாங்க நேரிடும். பூர்வீகச் சொத்தில் புதிய முதலீடுகள் வேண்டாம். பாகப்பிரிவினை விஷயத் தில், எக்காரணம் கொண்டும் வேகம் கூடாது; நிதானம் தேவை.

26.8.2023 முதல் 19.12.2023 வரை சனிபகவான் நான்காம் வீட்டில் அமர்வதால் தாயாரின் உடல் நிலை பாதிக்கும். உங்கள் மீது சிலர் வீண்பழி சுமத்துவார்கள். பயணத்தின்போது கவனம் தேவை.

வருடப் பிறப்பு முதல் 7.10.2023 வரை ராசிக்குள் கேது நிற்பதால் மன அழுத்தம், டென்ஷன், எதிலும் சந்தேகம் வந்து நீங்கும். ராகு 7ல் நிற்பதால் கணவன் மனைவிக்குள் மனக்கசப்பு ஏற்படும்.


திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். 1.4.2024 முதல் 13.4.2024 வரை சுக்ர பகவான் 6ல் மறைகிறார். ஆகவே, குடும்பத்தில் அவ்வப்போது சிறு சிறு பிரச்னைகள் ஏற்படலாம். சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். ஆனாலும் பேச்சில் சற்றுக் கவனம் தேவை. முன்கோபத்தைத் தவிர்க்கவும்.

**வியாபாரிகளே!** புதிய சலுகை களையும் அறிமுகப்படுத்துவீர்கள். போட்டியாளர் களை வெல்வீர்கள். உங்களின் மாறுபட்ட அணுகுமுறையால் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். வருகையும் அதிகரிக்கும். சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

**உத்தியோகஸ்தர்களே!** உயரதிகாரிகளின் ராஜதந்திரத்தை உடைத்தெறிவீர்கள். வெகு காலமாக நீங்கள் எதிர்பார்த்து இருந்த பதவி, சம்பள உயர்வுகள் இனி கிடைக்கும். வைகாசி, ஆனி மாதங்களில் புதிய பொறுப்பு வரும்.

**மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு உங்களுக்கு எதிர்பாராத திருப்பங்களையும் சமூகத்தில் பெரிய அந்தஸ்தையும் பெற்றுத் தருவதாக அமையும்.**

# மஹோற்சவம்



யாழ்ப்பாணம், ஏப். 26

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோயில் திவ்ய மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 6மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி மு.ப. 10 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும் 4ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-14)

* * *

சாவகச்சேரி, ஏப். 26

கெற்பேலி தரவையம்பதி நாச்சிமார் கோயில் வருடாந்த மஹோற்சவம், கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தில் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி தேர்த்திருவிழாவும மறுநாள் 2ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ,14,9)


அறை வாடகைக்கு

மூளாய் வைத்தியசாலைக்கு அருகில் பெண்களுக்கான பாதுகாப்பான நவீன வசதிகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

W/app - +6598 340600

(CS/24541)AH-1


# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகச் செயல்படும் நாள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அவ்வப்போது சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடுவது நல்லது. சிலருக்கு நண்பர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனு கூலமாக முடியும்.

**கடகம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். என்றாலும் தேவையான பணம் கையில் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்கள் அனுகூலமாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. பேசும்போது பொறுமை வேண்டும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். பெரியவர்களின் ஆலோசனை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடியும்.

**துலாம்:** உறவினர்கள் வருகையால் திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. முயற்சியில் எதிர்ப்புகளைக் கடந்து வெற்றி பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** பதற்றம் தவிர்த்து எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண் சச்சரவுகள் ஏற்படும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் தேவையைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். பிரச்சினை ஏற்படக்கூடும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும்.

**மகரம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும். தேவையான பணம் கிடைக் கும். ஆதாயம் கிடைக்கும். அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் அலைச்சலும் ஏற்படும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். உடல்நலனில் கவனம் தேவை.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை **திருமதி சாளினி யோகேஸ்வரன்** அவர்களின் அன்புத் தந்தை

**திரு. ஞானமுத்து அன்ரனி**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் சங்கம்,**
**புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

(CR/39720)AH-I

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை **திருமதி சாளினி யோகேஸ்வரன்** அவர்களின் அன்புத் தந்தை

**திரு. ஞானமுத்து அன்ரனி**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாறுதல் பெற வேண்டுகின்றோம்.

**புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

(CR/39719)AH-1

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் சித்திர பாட ஆசிரியர் **திரு.நா. கிருஷ்ணரூபனின்** பாசமிகு தந்தை **அமரர் கந்தன் ஆசாரி நாகராஜா** அவர்கள் இறைபதம் அடைந்தமையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

**மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் நட்புறவுக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அமைதியாக இருந்தால் அழிவே..!

**பொ**துமுடக்கத்தால் தமிழர் தாயகம் நேற்று இயல்பு நிலையை இழந்திருந்தது. தமிழ் பேசும் மக்கள் தங்கள் எதிர்ப்பை இந்தப் பொதுமுடக்கத்தின் ஊடாக வெளிக்காட்டியுள்ளார்கள். தங்களை வருத்தியே பொதுமுடக்கத்துக்கு மக்கள் பங்களிப்புச் செய்திருக்கின்றார்கள். வடக்கு – கிழக்கு மாகாணங்களில் அரச இயந்திரம் முழுமையாக முடக்கப்படவில்லை. அரச இயந்திரத்தை முடக்காவிட்டாலும் அதன் செயற்பாடு வழமைபோன்று நேற்று இடம்பெறவில்லை. இவை எல்லாவற்றின் ஊடாகவும் பொதுமுடக்கத்துக்கான கோரிக்கைகள் நிறைவேறாது.

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் மற்றும் வடக்கு – கிழக்கில் சிங்கள – பௌத்தமயமாக்கல் ஆகியனவற்றை எதிர்த்து முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதன் ஊடாகவே அவை வெற்றியைப்பெறமுடியும். ஒரு நாள் போராட்டத்துடன் எல்லாம் மாறிவிடுமென நினைப்பது மடத்தனம். பொதுமுடக்கம் மக்களின் அடையாள எதிர்ப்பு மாத்திரமே. மக்கள் எதிர்பார்ப்புக்கு மாறாக அரசாங்கம் செயற்படுகின்றது என்பது வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், அரசாங்கத்தை அடிபணிய வைக்கவேண்டுமாக இருந்தால் பொதுமுடக்கத்துடன் முடங்கிப்போகக்கூடாது. தொடர்போராட்டங்களுக்கான வித்தாக பொதுமுடக்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு போராடவேண்டும்.


தொடர்போராட்டங்களால் வெற்றிகள் சில கிடைத்திருக்கின்றன. முல்லைத்தீவின் கேப்பாபிலவில் இராணுவத்தினரின் பிடியிலிருந்து காணியை மீட்பதற்காக அந்த மக்கள் ஆரம்பித்த தொடர்போராட்டத்துக்கு அரசு அடிபணிந்திருந்தது. அதைப்போன்று புங்குடுதீவு மாணவி வித்தியா கொலைக்கு நீதிகோரிய தொடர்போராட்டங்கள் வெற்றியைப்பெற்றிருந்தன. இவை எல்லாவற்றுக்கும் அப்பால் கடந்த ஆண்டு கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட 'அரகலய' போராட்டம் ஆட்சியாளர்களையே விரட்டியது. தொடர்போராட்டம் மூலமே அரசாங்கத்தை ஆட்டம்காணச்செய்யமுடியும் என்பதற்கு இவை சில உதாரணங்கள் மட்டுமே.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அண்மைக்காலமாக தமிழர் தரப்பிலிருந்து எந்தவொரு தொடர் போராட்டமும் முன்னெடுக்கப்படவில்லை. போராட்டங்களை முன்னெடுப்பதற்கான அழைப்புக்களை பெரும்பாலும் அரசியல் கட்சிகளே விடுக்கின்றன. அரசியல் ஆதாயத்துக்காக அவற்றை சில அரசியல் கட்சிகள் எதிர்க்கின்றன. போராட்டமும் அரசியல் கட்சிகளுக்குரியதாகவும் அவற்றின் வாக்கு வங்கிக்கான அறுவடையாகவும் பார்க்கப்படுவதால் எதிர்பார்த்த எழுச்சியைக் கொடுப்பதில்லை. பொது அமைப்புக்களால் விடுக்கப்படும் போராட்ட அழைப்புக்கள் கூட கட்சிச்சாயம் பூசப்படுவதாலும், பொது அமைப்புக்களும் சுயாதீனமாக இயங்காமல் அரசியல் கட்சிகள் சார்ந்து செயற்படுவதாலும் அவையும் வெற்றியளிப்பதில்லை. இந்தப் பேராபத்திலிருந்து வெளியேவந்து தமிழினம் தொடர்ச்சியாகப் போராடவேண்டும். அதற்கான விதையாக நேற்றைய பொதுமுடக்கத்தை தமிழர் தரப்பு பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இன்றைய அவசரகதியில் இளம்சமூகம் தன்னை வருத்தி போராட்டத்தை ஆதரிக்குமா என்பது கேள்விக்குறியே. ஆனாலும் போராடாவிட்டால் நாளை இருப்பே இல்லாமல் போகும் என்பதை இளம்சமூகத்துக்கு உணர்த்தவேண்டும். அதைக்கூட எமது அரசியல் தலைமைகள் செய்யாமல் ஒருவரையொருவர் குழிபறிப்பதிலேயே குறியாக இருக்கின்றனர்.

இனத்தின் நலனை முதன்மைப்படுத்தி அரசியல் கட்சிகளோ அல்லது பொதுஅமைப்புக்களோ போராடத்தலைப்படவேண்டும். அதைச் செய்யாதவரையில், 2009 ஆம் ஆண்டில் இழந்ததைவிட நாம் இன்னமும் பெரிதாக இழக்கவேண்டிவரும். கறையான்போல இப்போதே எமது தாயகத்தை சிங்கள தேசம் அரித்துக்கொண்டிருக்கின்றது. இந்தப் பொதுப்பிரச்சினையை செய்தியாக கடந்து போய்விடாமல் அதன் பின்னால் உள்ள ஆபத்தை உணர்ந்து அதற்காகப் போராட ஒவ்வொருவரும் தலைப்படவேண்டும். ஆத்மார்த்தமான போராட்டத்தின் தொடர் எழுச்சியே அரசாங்கத்தை பின்வாங்கச்செய்யும். அதை விடுத்து நாம் அமைதியாக இருந்தால், அரசாங்கம் ஏறி மிதித்துச் செல்லும்.

### நாளொரு நல்வார்த்தை

"மனிதர்களால் தங்கள் மனப்பான்மையை மாற்றுவதன் மூலம் தங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொள்ள முடியும்" – **வில்லியம் ஜேம்ஸ்**




# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் முழு அறிக்கை கையளிப்பு!

**கொழும்பு, ஏப். 26**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கை கத்தோலிக்க ஆயர் பேரவையிடம் கையளிக்கப் பட்டுள்ளது.**

ஜனாதிபதியின் ஒப்புதலுடன் அமைச்சர் டிரன் அலஸ், அறிக்கையின் பிரதியொன்றை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் அருட்தந்தை ஹெரோல்ட் அந்தோனி பெரேராவிடம் கையளித்துள்ளார்.

(ஒ-14.இ)

# பஸில் ராஜபக்ச அமைப்பாளர் அல்லர்

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச அல்லர். அவர்தான் தேசிய அமைப்பாளர் என கட்சி எந்தவொரு கட்டத்திலும் அதிகாரபூர்வமாக அறிவிப்புகளை விடுக்கவில்லை. இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவுநரான பஸில் ராஜபக்சவே அக்கட்சியின் தேசிய அமைப்பாளராக அரசியல் வட்டாரத்தில் அடையாளப்படுத்தப்பட்டார். பஸில் ராஜபக்ச பங்கேற்ற நிகழ்வுகளின்போதுகூட அவர் தேசிய அமைப்பாளர் என்றே விளிக்கப்பட்டார்.

ஆனால் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச அல்லர் என்ற விடயத்தை டலஸ் அணி அண்மையில் அம்பலப்படுத்தியது. இதற்கு மொட்டுக் கட்சி பதிலடி கொடுக்கவில்லை. இந்த நிலையில் தகவல் அறியும் உரிமை சட்டம் ஊடாக பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, சாகர காரியவசத்திடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதன்போது, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் அல்லர் என்பதை அவர் ஏற்றுக்கொண்டார். அவர்தான் தேசிய அமைப்பாளர் என கட்சி அதிகார பூர்வமாக எங்கும் அறிவிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். சபுமல் வலவ்வத்த என்பவரே மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளராக பெயரிடப்பட்டுள்ளார். (ஒ-44)

## பொதியில் வந்த போதைப்பொருள்

கொழும்பு, ஏப். 26

வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்ட பொதிகளுக்குள் மறைத்துவைக்கப்பட்ட நிலையில் 12 கிலோகிராம் குஷ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கனடாவில் வசிக்கும் ஒருவர் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒருவருக்கு அனுப்பிய பொருள்கள் அடங்கிய 2 மரப் பெட்டிகளை சுங்க அதிகாரிகள் சோதனையிட்டபோது அவற்றில் குஷ் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மரப்பெட்டிகளில் இருந்து 24 போதைப்பொருள் பொதிகளை சுங்க அதிகாரிகள் மீட்டனர். மீட்கப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி சுமார் 84 மில்லியன் ரூபா எனவும் தெரிவித்தனர்.

(ஒ-14.இ)

நாளை

27.04.2023
வியாழக்கிழமை
சித்திரை 14

சுபநேரம் : 07.29 – 08.59
ராகுகாலம் : 01.29 – 02.59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகத்தில் கதவடைப்பு; சில பதிவுகள்!






யாழ்ப்பாணம்






கிளிநொச்சி



மன்னார்



வவுனியா



மட்டக்களப்பு




திருகோணமலை






முல்லைத்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



“மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று.” -வள்ளுவர்

குறிப்பு: சந்தேகநபரின் வாக்குமூலம், பொலிஸ் தரப்பு தகவல்கள், ஊர் மக்களின் தகவல்கள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு இந்தக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.







## நெடுந்தீவுக் கூட்டுக்கொலைகள்:

## ஏன்? எதற்கு? எப்படி?




### இதுவரை வெளிவராத புதிய தகவல்கள்

புலனாய்வுச் செய்தியாளர்
■ ஜெ. சுலக்சன்

நெடுந்தீவில் கடந்தவாரம் ஐவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட கோரச்சம்பவத்தை எவரும் அவ்வளவு எளிதில் மறந்திருக்க மாட்டார்கள். 'விலங்கு' என்ற வெப்சீரிஸில் ஒரு 'சைக்கோ' கொலையாளி எப்படி சிறு தவறை மறைக்க நினைத்து தொடர் கொலைகளில் இறங்கினானோ அதேபோன்ற வகையில்தான் இந்த நெடுந்தீவுக் கொலைகளும் நடந்திருக்கின்றன.

ஏன் அவர்கள்இப்படிக் குரூரமாகக் கொலையுண்டார்கள்? கொலைக்கான காரணம் என்ன? நகைகளைக் களவாடத்தான் இந்தக் கொலைகள் நடந்தனவா? அல்லது முன்பகை ஏதேனும் உண்டா? என்றெல்லாம் பல கேள்விகள் மக்களிடம் உலவுகின்றன. அந்தக் கேள்விகளுக்கு தாங்கள் கற்பனை செய்த கதைகளை ஒவ்வொருவரும் 'அடித்து' விடுகிறார்கள். அதனால் நெடுந்தீவுக் கொலைகளின் பின்னால் உள்ள உண்மைகளை வெளிப்படுத்த வேண்டுமென்பதற்காக நாம் களமிறங்கினோம். நாம் சேகரித்த, நமக்குக் கிடைத்த ஆதாரபூர்வமான தகவல்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தத் தவறவில்லை. வெறும், இரண்டாயிரம் ரூபாதான் இந்தக் கூட்டுக்கொலைகளுக்கான அடிப்படைக் காரணம் என்பதை யாராவது நம்புவீர்களா? ஆனால் நம்பித்தானாக வேண்டும்.

கொலைமுயற்சியொன்றுக்காக ஜேர்மனியில் தண்டிக்கப்பட்டவர்தான் இந்தக் கோரக்கொலைகளின் சந்தேகநபர் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஜேர்மனி அரசின் தண்டனையின் ஓரங்கமாக அவர் அங்கிருந்து இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டார். நாடு திரும்பிய சந்தேகநபர் கொழும்பிலும், பின்னர் புங்குடுதீவில் உறவினர் வீடுகளிலும் தங்கியிருந்தார். ஆனாலும் கையில் இருந்த காசு கரைந்ததால், ஏதேனும் தொழில் செய்யவேண்டிய நிலை. இதனால் அடிக்கடி அனலைதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு என்று ஒவ்வொரு இடமாக மாறிக்கொண்டேயிருந்தார். போகுமிடங்களில் கிடைக்கும் சிறு வேலைகளைச் செய்து அன்றாடவாழ்வைப் போக்கினார். இப்படியிருக்கையில் தான் நெடுந்தீவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டியாக இந்தச் சந்தேகநபர் செயற்படத் தொடங்கினார். ஆனாலும் எல்லாநாளும் சுற்றுலாப்பயணிகள் அங்கு வருவதில்லை. எனவே நெடுந்தீவில் தங்கியிருக்கும் நாள்களில் சிறுசிறு கூலி வேலைகளையும் செய்யத் தொடங்கினார். இப்படி அங்கு நிற்கும்போதுதான், மாவலி இறங்குதுறைக்கு எதிர்த்தாற்போல இருக்கும் நாகசுந்தரி என்ற மூதாட்டியின் அறிமுகம் சந்தேகநபருக்குக் கிடைத்தது. தன் வீட்டுக்கு யார் வந்தாலும் சாப்பாடு கொடுத்து உபசரிப்பது நாகசுந்தரியின் இயல்பு. அதனால் அவர் வீட்டுக்குச் சென்றால் வயிறார உண்ணலாம் என்பதால் சந்தேகநபர் நெடுந்தீவு செல்லும்போது அடிக்கடி அங்கு செல்லத் தொடங்கினார்.

இம்முறையும் சுற்றுலாப்பயணிகளுக்கு வழிகாட்டியாகத் தொழிற்படுவதற்காக, அங்குள்ள தனியார் தங்குமிடத்தில் சந்தேகநபர் இருநாள்கள் இருந்தான். ஆனால், போதிய பணம் இல்லாததால் அங்கிருந்து வெளியேறி, நாகசுந்தரியின் வீட்டில் தஞ்சமடைந்தான்.

நெடுந்தீவில் உள்ள ஆலயமொன்றில் திருவிழாவும், இன்னொரு ஆலயத்தில் கும்பாபிஷேகமும் நடப்பதால் வெளிநாட்டில் இருந்தும், வெளியூர்களில் இருந்தும் நாகசுந்தரியின் சகோதரிகளும் உறவினர்களும் அந்த வீட்டுக்கு வந்து தங்கியிருந்தனர். நாகசுந்தரியின் சகோதரியான கண்மணிப்பிள்ளை, கண்மணிப்பிள்ளையின் கணவர் பாலசிங்கம், இன்னொரு சகோதரியான நாகரத்தினம் (லண்டனில் இருந்து வந்தவர்), உறவினரான பூரணம் ஆகியோர் அந்த வீட்டுக்கு வந்து தங்கியிருந்தனர். இந்த நிலையில் நெடுந்தீவில் இருந்து யாழ்ப்பாணம் செல்லலாமென சந்தேகநபர் நினைத்தான். ஆனால், கையில் காசில்லை. நெடுந்தீவில் தனக்குத் தெரிந்த சிலரிடம் காசு கேட்டும் கிடைக்காத நிலையில், கடைசியாக `நாகசுந்தரியிடம் கேட்டுப்பார்க்கலாமென சந்தேகநபர் நினைத்திருக்கிறான். ஆனால், நாகசுந்தரி தன்னிடம் காசில்லையென கைவிரித்துவிட்டார்.



ஆன்ால் அவரிடம் காசிருப்பது சந்தேகநபருக்குத் தெரியும். எனவே எல்லோரும் தூங்கிய பின்னர் அறையொன்றுக்குள் 'நைஸாக' தனக்குத் தேவையான அந்த 2 ஆயிரம் ரூபாவை எடுத்துக்கொண்டு போகும் எண்ணத்துடன், அங்கேயே இரவுணவைச் சாப்பிட்டுவிட்டு படுத்திருக்கிறான். எல்லோரும் அயர்ந்து தூங்குகிறார்கள் என்று உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர், வீட்டின் உள்ளே சென்று இரண்டாயிரம் ரூபாவை தான் நினைத்தபடி, எடுத்துக்கொண்டு அவன் திரும்பியபோது.... எதிர்பாராதவிதமாக தூக்கத்தில் இருந்து எழுந்த பாலசிங்கம் அவன் காசைக் களவாடியதைக் கண்டுவிட்டார். "கள்ளா, காசைக் களவெடுத்துக்கொண்டு ஓடுறியோ?" என்று பாலசிங்கம் பலமாகச் சத்தமிட ஆரம்பிக்க,அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அப்போது கையில் கத்தி தட்டுப்பட, அப்படியே ஓங்கி முகத்தில் வெட்டினான். பாலசிங்கம் சரிந்து விழ, இன்னும் பலமாக அவரை நாலைந்துமுறை வெட்டிவிட்டு, மூச்சடங்கிய பின்னர் அப்படியே அவரை அந்த அறைக்குள் போட்டு, கதவைப் பூட்டிவிட்டு ஓடநினைத்தான். ஆனால், முடியவில்லை.

## 24 மணித்தியாலத்துக்குள் அவிழ்ந்த மர்ம முடிச்சுகள்





வீட்டு உரிமையாளரான நாகசுந்தரி பாலசிங்கத்தை வெட்டி, அந்த அறைக்குள் போட்டு பூட்டியதைக் கண்டு கத்த முற்பட,அவரையும் சரமாரியாக அவன் வெட்டிக் கொன்றான். நாகசுந்தரியின் அலறல் கேட்டு, கண் விழித்த கண்மணிப்பிள்ளையும், நாகரத்தினமும் கண்முன்னே நடக்கும் கோரத்தைக் கண்டு கதிகலங்கிப் போயினர். உயிர்ப்பயத்தில் இருவரும் இருளின் துணையோடு, வீட்டின் பின்பக்கமாக ஓடிப்போய் ஒளிந்து கொண்டனர். ஆனால், கொலையாளியின் பார்வையில் இருந்து அவர்களால் தப்பமுடியவில்லை. வீட்டுக்குள் இருந்த 100 வயதான பூரணத்தை வெட்டிய பின்னர் (அதிர்ஷ்டவசமாக அவர் காயங்களோடு தப்பிவிட்டார்), ஏனைய இருவரும் ஒளிந்திருந்த இடத்திலேயே வைத்து அவர்களையும் கண்டபடி வெட்டித்தள்ளிவிட்டு, கொலையாளி வெளியேற நினைத்தபோது, விதிவசத்தால் அங்கு வந்து சேர்ந்தார் நாகசுந்தரியின் உறவினரான மகாதேவா.

(09ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 04.05.1940

## திருமதி புனிதவதி இராசதுரை

ஆண்டவன் அடியில் 22.04.2023

(உரிமையாளர்-சுவிஸ் கிங் ரவல்ஸ், புனிதம் பல்பொருள் அங்காடி, இந்தியா)



சரவணை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி இராசதுரை அவர்கள் கடந்த (22.04.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற முருகேசு சிவக்கொழுந்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், அமரர் இராசதுரையின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான ரூபவதியம்மா - கனகசபை, தில்லையம்மா - சின்னத்துரை, பொன்னுத்துரை - சிபாக்கியம் ஆகியோரின் பெறாமகளும், அமரர் பாலசுப்பிரமணியம் - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகளும், கமலாதேவி, தவமணி, சரசு, மகேசு, முருகேசபிள்ளை (அமரர்), பரமேஸ்வரன் (அமரர்), ஜெகதீஸ்வரி, குமரேஸ்வரன், ஜெகசத்தி, வள்ளியம்மை (அமரர்), நாகேந்திரம் (அமரர்), சின்னப்பா, கோபாலகிருஷ்ணன் (அமரர்), சின்ராசா, பிள்ளையார், செல்வம் ஆகியோரின் சகோதரியும், சிவபாக்கியம், நகுலேஸ்வரி, தயாநிதி, குலநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மனோகரன், நீலாம்பரன், இளங்கோவன், பகீரதன், வனஜா, தர்மவாசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகேஸ்வரி, வதனி, இந்துமதி, வினோதினி, சபேசன், தாமரைச்செல்வி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அபித், அபிஷேக், அபிஷன், ஆருஷன், அபிதன், அஜிதன், இராகிதன், விஷால், அபிஷா, வேளருவி, ஆதவன், ஆதவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22.04.2023 தொடக்கம் சரவணை மேற்கு வேலணையில் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (26.04.2023) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் நாரந்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 24621)A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 08.12.1948

## சுப்ரமணியம் மகாதேவா

மறைவு 22.04.2023



யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு, சிவபுரம், பாண்டியன்குளம், அனலைதீவு, ஜேர்மனி Neuss, நோர்வே Oslo, இந்தியா, சென்னை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சுப்ரமணியம் மகாதேவா கடந்த (22.04.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வேலாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், அனலைதீவைச் சேர்ந்த பரமலிங்கம் (இந்தியா) காலஞ்சென்ற பேரின்பநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும், கேதீஸ்வரியின் ( சென்னை - இந்தியா) அன்புக் கணவரும், கோமா (கவிதா - நோர்வே), கிருபாலினி (கனடா), சிந்துஜா (நோர்வே), துஷ்யந்தன் (நோர்வே), ஜெயந்தன் (சென்னை - இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கண்ணன், தினேஷ், முரளி, வெரோனிகா, சஹானா ஆகியோரின் அன்பு மாமனாரும், பரமேஸ்வரி (கிளிநொச்சி), மகேஸ்வரி (பாண்டியன்குளம்), தில்லைநாயகி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் ( ஜி.எஸ் - பாண்டியன்குளம்), கமலேஸ்வரி (பாண்டியன்குளம்), பத்மாதேவி (இந்தியா), விஜயலலிதா (சிவபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான துரைசாமி, இரத்தினம், இரத்னராஜா மற்றும் புஸ்பகாந்தா, பொன்னம்பலம், ராயன், விஜயபாஸ்கரன் ஆகியோரின் மைத்து னரும், சந்தீப், சபீதா, சபீசன், தியான், டிஜா சாஸ்தி, டேவ் சாஸ்தா, டேயோன், ஜெய்சிவின் ஆகியோரின் அன்புப் பேரனும், வேதநாயகம், கேதிஸ்வரநாதன், சிவநாயகம், சிவகரன், சிவலிங்கம், அரிகரன், சிவகௌரி, கலைவாணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2023) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கிளிநொச்சி திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 24/2, கணேசபுரம்,**
**கிளிநொச்சி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/50177)AH-1

மனோ - 077 387 2992, ஜெயந்தன் - 076 062 6205,
ரமேஷ் - 077 471 0724, ராயன்-077 9483790

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர் கடலுக்குள்! சிலுவைப்பாதை தியானம்

குருநகர் கடலுக்குள் சுமார் 5 வருடங்களின் பின்னர் மீண்டும் திருச்சிலுவைப்பாதைத் தியானம் இடம்பெற்றுள்ளது. குருநகரில் முதன்முதலில் அருட்பணி ம.இம்மானுவேல் பயஸ் அடிகளாரின் காலத்தில் (1973 1976) கடலில் மின்னொளியில் சிலுவைப்பாதை காட்சிப்படுத்தப்பட்டது. அதன் பின்னர், 2018ஆம் ஆண்டு குருநகரில் இரண்டாவது தடவையாக கடலுக்குள் சிலுவைப்பாதை காட்சிப்படுத்தப்பட்டு தியானமும் இடம்பெற்றது. இந்த நிலையில், ஐந்து ஆண்டுகளின் பின்னர் இம்முறை கடலில் இந்த சிலுவைப்பாதைத் தியானம் இடம்பெற்றுள்ளது.

அருட்தந்தை யாவிஸ் அடிகளாரின் ஆலோசனையில், ஜெகன் கரணசனின் நெறிப்படுத்தலில் இந்த சிலுவைபாதைத் தியானம் இடம்பெற்றது. (ய)










## சிதைந்த ஓவியம்

அழகும் அறிவும் ஒருங்கிணைந்து
ஆர்வமும் அக்கறையும் போட்டியிட
நற்குணம் எனும் வர்ணம் குழைத்து
பாசம் எனும் தூரிகை கொண்டு
தீட்டிய ஓவியம் அதன்
அருமை தெரியாதவனிடம் ஒப்படைத்ததால்
இன்று சிதைந்த ஓவியமாய் நிற்கிறது!

- துர்க்கா -

## எழுத்தாளர்கள் கௌரவிப்பு







அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தால் மூன்று தமிழ் எழுத்தாளர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டுள்ளனர். அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் செயலாளர் நடேசன் தலைமையில், கிளிநொச்சி பழைய மருத்துவமனை வளாகத்தில் உள்ள சமூக மண்டபத்தில் குறித்த நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

16 வருடங்கள் சிறையிலிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட அரசியல்கைதியும் எழுத்தாளருமான விவேகானந்தனூர் சதீஸ், அருட்திரு தமிழ்நேசன் அடிகளார். சிவராசா கருணாகரன் ஆகியோரே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர். (ய)

## நெடுந்தீவுக் கூட்டுக்கொலைகள்:

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெடுந்தீவில் இருக்கும் மகாதேவா, நாகசுந்தரி உள்ளிட்டோருடன் அன்றுகாலை படகில் யாழ்ப்பாணம் செல்ல இருந்தார். போகுமுன்னர் நாகசுந்தரியின் வீட்டில் வந்து குளித்துவிட்டு, அவர்களையும் அழைத்துப் போவதற்காக பொழுது புலர்வதற்கு முன்னதாகவே விதி அவரை அங்கு கொண்டுவந்திருந்தது.

வீட்டுக்குள் செல்லமுயன்ற மகாதேவாவை ஏதேதோ காரணம் சொல்லி, உள்ளே செல்லவிடாமல் கொலையாளி தடுக்க முயன்றான். ஏனெனில் மகாதேவா உள்ளே போனால், கொலையுண்டவர்களின் சடலங்களைக் கண்டு விடுவார் என்பதாலே கொலையாளி அவரை உள்ளே செல்லவிடாமல் தடுக்க நினைத்தான். ஆனால், அவன் சொன்னதையும் மீறி, 'குளிக்கத்தான் போகிறேன்' என்று உள்ளே சென்றார் மகாதேவா. அவ்வளவுதான், அவரையும் உள்ளே செல்லவிட்டு, பின்பக்கமாக போய் கத்தியால் வெட்டியும், அடித்தும் கொன்றான் அவன். பின்னர் கொஞ்சமும் தாமதிக்காமல் இரத்தக் கறை படிந்த சாரத்தைக் கழற்றி, கத்தியில் இருந்த இரத்தத்தை துடைத்தான். கத்தியையும், சாரத்தையும் அப்படியே அந்த வீட்டின் பின்பக்க வளவில் இருக்கும் பாவனையற்ற கிணற்றில் வீசிவிட்டு, வீட்டுக்குள் திரும்ப வந்தான். நகைகளை எடுத்துக்கொண்டான். அப்போது வெளிநாட்டால் வந்தவரின் புதிய சூட்கேஸ் கண்ணில் பட, அதையும் எடுத்துக்கொண்டான். (சூட்கேஸினுள் பெறுமதியான பொருள்கள் இருக்குமென்பதா அதனை அவன் எடுத்துக்கொள்ளக் காரணம். ஆனால், அதற்குள் உடுபுடைவைகளே இருந்தன)அப்படியே வெளியே வந்த்வன் முதல் படகிலேயே நெடுந்தீவில் இருந்து புறப்பட்டு, புங்குடுதீவில் உள்ள உறவினர் வீட்டுக்கு எதுவுமே நடக்காதது போல வந்தான். அங்கு குளித்துவிட்டு, வெளியே போய்விட்டு, இரவு மீண்டும் உறவினர் வீட்டுக்குள் படுத்திருந்தான்.

இந்த நிலையில் அந்தக் கொலையாளி பற்றிய சந்தேகத்தை ஏற்கனவே நெடுந்தீவில் உள்ள பொலிஸாருக்கு மக்கள் தெரியப்படுத்தியபோதும் அவர்கள் அதனைக் கருத்தில் எடுக்கவில்லை. ஆனால் நெடுந்தீவு மக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற பொலிஸாரின் சிறப்புச் செயலணி கொலையாளியை இனம் கண்டுவிட்டது. யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தினவின் வழிகாட்டலில், பொலிஸ் பரிசோதகர் பொ. மேனன், உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் ஆகியோரின் கீழ் பண்டார, சம்பத், ஜெயந்தன், பிரவீன், ஜெயசிறி, ஜெயதிஸ்ஸ, சுகந்தன் ஆகியோர் கொண்ட பொலிஸ் சிறப்புச் செயலணியினர் கொஞ்சமும் தாமதிக்காமல் புங்குடுதீவில் உள்ள சந்தேகநபரைக் கைது செய்யுமாறு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தனர். அதன் பின்னர் உறவினர் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். முதலில் தான் கொலை செய்யவில்லை என்று சந்தேகநபர் மறுத்தார். ஆனால் கொலையுண்டவர்களின் நகைகள், சூட்கேஸ் என்பன அந்த வீட்டில் இருந்து மீட்கப்பட்ட பின்னர் சந்தேகநபரால் தொடர்ந்தும் நாடகமாட முடியவில்லை. குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

ஆனாலும் பொலிஸ் விசாரணையின் போது, போதையில் இருப்பவர்கள் போலவும், மனநிலை பாதிக்கப்பட்டவர் போலவும் சந்தேகநபர் பதிலளிக்கத் தொடங்கினான். ஆனாலும் பொலிஸாரின் புத்திசாலித்தனமான விசாரணை வியூகங்களுக்கு முன்னால் அவனால் அதிகநேரம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஒருகட்டத்தில் எப்படி, ஏன் கொலை செய்தான் என்பதையும், கொலைக்குப் பயன்படுத்திய கத்தி, இரத்தக்கறை படிந்த சாரம் என்பவற்றை எங்கு எறிந்தான் என்பதையும் கக்கினான். இப்போது தடயப்பொருள்களும் மீட்கப்பட்டு, சந்தேகநபர் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளான். நெடுந்தீவை மட்டுமல்லாது நாட்டையே உலுக்கிய இந்தக் கூட்டுக்கொலைகள் தொடர்பில் மின்னல்வேக விசாரணையில் குதித்து 24 மணித்தியாலத்துக்குள் சந்தேகநபரையும் தடயப்பொருள்களையும் கண்டறிந்த பொலிஸ் அணியினர் உண்மையிலேயே பாராட்டுக்குரியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் கிழக்கு பொற்பதி விநாயகர் ஆலய வருடாந்த இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம்-2023

மேற்படி ஆலயத்தில் இன்று (26.04.2023) தொடக்கம் (05.05.2023) வரை 10 நாட்களுக்கு இலட்சார்ச்சனை தினமும் மாலை 4.30 மணியளவில் ஆரம்பமாகும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

**குறிப்பு :- மேற்படி ஆலயத்தில் திருத்த வேலைகள் செய்து கும்பாபிஷேகம் செய்ய இருப்பதால் அதற்கு அடியவர்களாகிய நீங்கள் தங்களால் இயன்ற நிதி உதவிகளை ஆலய குருவிடம் தொடர்பு கொண்டு வழங்கவும் என்பதனை அடியார்களிடம் பணிவாக கேட்டுக் கொள்கின்றோம். (இத்திருப்பணி நிதிக்கு தனிநபர் எவரையும் நியமிக்கவில்லை என்பதை அறியத் தருகின்றோம்.**

**ஆலய பிரதமகுருவும்**
**பரிபாலகரும், உரிமையாளருமாகிய**
**சிவஸ்ரீ. தியாகராஜக் குருக்கள் நடராஜக் குருக்கள்,**

## PEOPLE'S BANK தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.12.2021 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 12.05.2023 (வெள்ளிக்கிழமை), 13.05.2023 (சனிக்கிழமை) ஆகிய திகதியில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாழ் ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), தெல்லிப்பளை, மல்லாகம், காங்கேசன்துறை, யாழ் பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, யாழ்.பல்கலைக் கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ்.கன்னாதிட்டி, இணுவில், பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம்.

நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி : 11.05.2023
ஏலவிற்பனை நடைபெறும் இடம் : யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை
திகதி : 12.05.2023 (வெள்ளிக்கிழமை)
13.05.2023 (சனிக்கிழமை)

அறிவித்தலின்றி திகதியை ஒத்திபோடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல : 021-222 2601 / 021-222 8602
தொலைநகல் : 021-222 2602
மின்னஞ்சல் : jafrho@peoplesbank.lk

(CR 39723) A-1

## ஞானவைரவர் ஆலய இராஜகோபுர அடிக்கல்



### அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் உபயகாரர் பொதுச்சபைக் கூட்டம்

அளவெட்டி வடக்கு, தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய **உபயகாரர் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.** உபயகாரர் அனைவரையும் தவறாது வருகை தருமாறு வேண்டுகின்றேன்.

1. சென்ற பொதுச்சபைக் கூட்ட அறிக்கை
2. நிதி அறிக்கை
3. புதிய நிர்வாகத் தெரிவு

(CS/50179)AH-1 செயலாளர்

யாழ்., ஏப். 26 யாழ்ப்பாணம், கொக்குவில் தலையாழி அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய இராஜகோபுர அடிக்கல் நடும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 7.05 மணி தொடக்கம் இடம் பெறவுள்ளது என ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்தனர். (ச)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



**கடந்த 28.03.2023 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி**
**அமரர்**
**திருமதி தங்கராஜசிங்கம் தவரஞ்ஜினி**
**அவர்களின்**

**வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை 27ஆம் திகதி (27.04.2023) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் (976, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோமிலடி, யாழ்ப்பாணம்) நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

**– குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## திருமதி கார்த்திகேசு நாகசுந்தரி



தோற்றம் 07 • 05 • 1938

மறைவு 22 • 04 • 2023

நெடுந்தீவை பிறப்பிடமாகவும் நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு நாகசுந்தரி அவர்கள் கடந்த (22.04.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம்சென்ற இராமலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலம்சென்ற கணபதிப்பிள்ளை நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலம்சென்ற கார்த்திகேசு அவர்களின் அன்பு மனைவியும் காலம்சென்ற நாகம்மா பூரணம் மற்றும் காலம்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா நாகரத்தினம் கணமணிப்பிள்ளை சிந்தாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், லோகேந்திரன் (கனடா) மற்றும் காலம்சென்ற யோகேந்திரன் ஆகியோரின் அன்புத்தாயும், யோகேஸ்வரியின் (கனடா) அன்பு மாமியாரும், கார்த்திகன் கபிலன் ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 116/2, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நாளை (27.04.2023) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 10.00 மணிக்கு தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**0776510943, 0774269166**

## திருமதி வேலாயுதபிள்ளை நாகரத்தினம்



தோற்றம் 17 • 06 • 1934

மறைவு 22 • 04 • 2023

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும் இலக்கம் 178 பாண்டியன்குளம் கொலண்ட் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதபிள்ளை நாகரத்தினம் அவர்கள் கடந்த (22.04.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம்சென்ற இராமலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலம்சென்ற கந்தையா நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலம்சென்ற வேலாயுதபிள்ளை (ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், காலம்சென்ற நாகம்மா பூரணம் மற்றும் காலம்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா நாகசுந்தரி கண்மணிப்பிள்ளை சிந்தாமணி ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலம்சென்றவர்களான நடேசபிள்ளை கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை மற்றும் தாமோதரம்பிள்ளை தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், மனோறஞ்சினி (UK), கலாறஞ்சினி (ஜேர்மனி), பவானி (ஆசிரியை நாமகள் வித்தியாலயம் திருகோணமலை), லோகேஸ்வரன் (UK), லோகேந்திரன் (கனடா), மோகனகுமார் (UK), நந்தகுமார் (UK) ஆகியோரின் அன்புத்தாயும், பத்மநாதன் (UK), தனபாலசிங்கம் (ஜேர்மனி), இரவீந்திரநாதன் (முன்னாள் இணைப்பாளர் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்), சாந்தினிதேவி, யோகேஸ்வரி, பாமினி, நித்யா ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோஜன் நிசாந் நிலானி மானுசன் ஆதவன் சௌமியா சாரங்கன் கவின் நவின் கார்த்திகன் கபிலன் மிதுன் ஹரினி சியானி, சிவானி, ஆரனி ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 116/2, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நாளை (27.04.2023) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மு.ப 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**0776510943, 0774269166**

(CS 24626)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவில் மேதை தெட்சணாமூர்த்தி ஆவணப்படம் யாழில் திரையிடல்


தவில் மேதை யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தி பவுண்டேசன் தயாரிப்பில் பிரபல ஆவணப்பட இயக்குநர் அம்சன்குமார் இயக்கத்தில் இந்திய அரசின் தேசிய விருது பெற்ற 'லய ஞான குபேர பூபதி யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தி' என்னும் முழுநீள ஆவணப்படம் திரையிடப்படவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று பிற்பகல் 3 மணிக்கு திரையிடப்படுகிறது.

தவில் இசை உலகின் மாபெரும் கலைஞரான இணுவில் தெட்சணாமூர்த்தி பற்றிய இந்த முழுநீள ஆவணப்படம், இசைக்கலைஞர்கள், அறிஞர்கள், ரசிகர்கள் மற்றும் அவரது குடும்பத்தினரின் நேரடித் தகவல்களின் வாயிலாக அவரது வாழ்வையும் மேதமையையும் சித்திரிக்கின்றது.

இந்தியா, இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகளில் படமாக்கப்பட்டுள்ளது இந்த ஆவணப்படம்.

யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தியின் நினைவுகளை மீட்கும் இந்த மாலைப்பொழுதில் இசை ஆர்வலர்கள், ஆவணப்பட ஆர்வலர்கள் பங்கேற்று களிப்புறுக. அனுமதி இலவசம் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச)

## மரண அறிவித்தல்



### அம்பலவாணர் கனகசபை (குட்டி மாமா சாரதி)

ஆனைக்கோட்டை கூழாவடி ஒழுங்கையை பிறப்பிடமாகவும், பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் கனகசபை (குட்டி மாமா) நேற்று (25.04.2023) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பிரதீபா, பிரதீபன் (நியூ குட்டி கராஜ்), பிரமிளா (ஆசிரியர் குட்டியபுலம் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், தாட்சாயின் (ரோஜா), நந்தகோபன் (சிறைச்சாலை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், வருணிகா, ரித்திகா, தமிழ்மாறன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2023) புதன்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் முற்பகல் 9.00 மணிக்கு தகனக் கிரியைக்காக புத்தூர் மேற்கு சுன்னாகம் வீதி, ஆடையன்தாழ்வு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 24615) A-1

## மரண அறிவித்தல்

மண்ணில் 28 . 03 . 1962



விண்ணில் 22 . 04 . 2023

### திருமதி துஸ்யந்தி இராமலிங்கம்

தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி துஸ்யந்தி இராமலிங்கம் அவர்கள் கடந்த (22.04.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தெல்லிப்பழையை சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசையா அம்பிகாதேவி தம்பதியரின் மகளும், சுன்னாகம் கப்பல் வளவினை சேர்ந்த காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு பத்மாவதி தம்பதியரின் மருமகளும், மார்க்கண்டு இராமலிங்கம் (இளைப்பாறிய கிராம சேவையாளர், சுன்னாகம் கிழக்கு) அவர்களின் பாசமிகு மனைவியும், குமரன் (பொலிஸ் உத்தியோகத்தர், கொழும்பு), ரஜீவன் (கனடா), ஜெனகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், திஷாரதி அவர்களின் மாமியாரும், பர்ஜித், மஹஜித் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காண்டீபன், தமயந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திர குமாரி, காலஞ்சென்ற சுந்தரரூபன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2023) புதன் கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் சுன்னாகம் இல்லத்தில் இடம்பெற்று, கொத்தியாலடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.


கப்பல் வளவு
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 24625) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 03 . 1937



மறைவு 19 . 04 . 2023

### அருணாசலம் மகாதேவன்

யாழ். சிறுப்பிட்டி தெற்கை பிறப்பிடமாகவும் லண்டன் Surrey யை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் மகாதேவன் கடந்த (19.04.2023) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு வினாசித்தம்பி அருணாசலம் திருமதி அருணாசலம் மாசிலாமணி தம்பதியரின் அன்பு மகனும், தர்மலிங்கம் (ஓய்வுநிலை ஆசிரியர்), கனகம்மா, காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மங்கையற்கரசி, காலஞ்சென்ற இராமநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சக்திவேலனின் (பாபு) அன்பு சித்தப்பாவும், தயாபரன், நளாயினி, மீனலோஜினி, கௌசலா (சாந்தி), காலஞ்சென்ற கயமுகன் ஆகியோரின் அன்பு மாமாவும், லதாங்கி, கம்சத்வனி, ஹரிபவன், ஹரன்னியா, விதுரன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (27.04.2023) வியாழக்கிழமை லண்டனில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தயாபரன் - 00447914765111
பாபு - 004790568597
தர்மலிங்கம் - Whatsapp-0094776365719

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 24616) A-1

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 07 . 1961



மறைவு 24 . 04 . 2023

### கந்தன் ஆச்சாரி - நாகராசா (பத்தர்)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் ஆச்சாரி நாகராசா கடந்த (24.04.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன் ஆச்சாரி - பாக்கியலக்ஷ்மி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் - சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஜெயகுமாரி (மஞ்சுளா) வின் பாசமிகு கணவரும், உஷாந்தினி (முன்னாள் ஆசிரியை, மூளாய் இந்து இளைஞர் மன்ற முன்பள்ளி), நிஷாந்தினி (அபிவிருத்தி, உத்தியோகத்தர் பிராந்திய சுகாதார பணிமனை - கிளிநொச்சி), கிருஷ்ணரூபன் (ஆசிரியர், யா/ மானிப்பாய் இந்து கல்லூரி), காந்தரூபன், கமலாஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிகரன், உதயகுமார், சுஜேந்தினி (லண்டன்), கௌதமன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீஸ், டனுசிகன், வருண், கனிகா, மிதுரன், ஆதீரன் ஆகியோரின் அன்பு பேரனும், அபிராமி, காலஞ்சென்றவர்களான இராசம்மா, அருணாசலம் மற்றும் ஆனந்தன், காலஞ்சென்ற தியாகரர்ஜா மற்றும் சரஸ்வதி, ஜானகி, இராதாகிருஷ்ணன், காலஞ்சென்ற கமலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

காளிகோவிலடி, மூளாய்.
077 416 1063

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 24614) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 09 . 1959



மறைவு 25 . 04 . 2023

## ஞானமுத்து அன்ரனி (றீற்றர்)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல. 19, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம், இல.203, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமுத்து அன்ரனி (றீற்றர்) நேற்று (25.04.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரி ஞானமுத்து கிறிஸ்ரினம்மா தம்பதியரின் அன்பு மகனும் மடுத்தீன் லாசறஸ் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற பிலோமினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெறால்டினின் பாசமிகு கணவரும் மொறின், கரோலின் சாளினி (ஆசிரியை - புனித பத்திரிசியார் கல்லூரி), அருட்பணி ஜோண் கனிசியஸ், மரிய அன்ரோனியஸ் (P.P.T நிறுவனம்) ஆகியோரின் பாசமிகு த்ந்தையும் அருட்பணி பிலேந்திரன் (வாழ்நாள் பேராசிரியர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), பீற்றர், அமலன் (கனடா), விமலன் (ஜேர்மனி), அருட்பணி வென்சஸ்லோஸ் அ.ம.தி (அஞ்சலியகம் - பருத்தித்துறை), எசார்வே (ஆசிரியர் - யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்), ஜெறாட் (கனடா), நவம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் லில்லி கிறேஸ், குயின் (கனடா), பொலின் (ஜேர்மனி), மேரி றீற்றா (ஆசிரியை - யா/ சென் ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்), மாலா (கனடா), அலெக்ஸ் (முகாமையாளர் - இலங்கை வங்கி - அச்சுவேலி), ஜீவா (ஜேர்மனி), ஜஸ்ரின் அன்ரனிற்றோ (ஓய்வுநிலை ஆசிரியர்), ராணி (ஜேர்மன்), அழகு, குமாரி (ஜேர்மனி), சிபிலா, ஜெறால்ட் றொசானி (ஆசிரியை - சென் மேரிஸ் வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனரும் பிலிப் சசிதரன் (அஞ்சல் அதிபர் - புங்குடுதீவு), யோகேஸ்வரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் - கிளிநொச்சி மேற்கு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அனிகா, சர்வின், அடேல், மெரின்சா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (26.04.2023) புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு இல.19, பாங்சால் வீதியில் உள்ள இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, மண்டைதீவில் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 3.00 மணியளவில் மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல. 19, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்
இல. 203, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (CS/24613)AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

077 2017020, 077 1631194, 076 2246928

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 03 . 1940



மறைவு 24 . 04 . 2023

## சொக்கலிங்கம் தியாகராசா ஆச்சாரி

தென் இந்தியாவை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பத்திரகாளி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் தியாகராசா ஆச்சாரி நேற்றுமுன்தினம் (24.04.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் ஆச்சாரி - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணன் ஆச்சாரி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தனலெட்சுமியின் அன்புக் கணவரும், சிவலிங்கம் (அம்பிகா நகைமாளிகை), நடராசா, ரவி, சித்திரா, சுமித்திரா மற்றும் காலஞ்சென்ற கண்ணனின் அன்புத் தந்தையும், செல்லம்மா, ராசம்மாள், கதிர்வேல் ஆகியோரின் சகோதரரும், ராஜலெட்சுமி, தவராணி, பத்மாவதி, லெட்சுமணன், தர்சனன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பேரப்பிள்ளைகளின் பேரனும், பூட்டப்பிள்ளைகளின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயாத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 711 0726

(cs50145) (N-1)

# மரண அறிவித்தல்

## திரு.அருளப்பு தயா

(இலங்கை மின்சார சபை ஊழியர், கோண்டாவில் - யாழ்ப்பாணம்)



மண்ணில் 02.08.1962

விண்ணில் 25.04.2023

மல்வம் உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளப்பு தயா நேற்று (25.04.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு - அரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அமிர்தவாசகம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், டொறின்ராஜி (பிரான்ஸ்), கியூதரன், ஜெரோதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்ரனியின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும், அர்வினின் (பிரான்ஸ்) அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.04.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மல்லவம், உடுவில்.
077 874 3020

தகவல்:
குடும்பத்தினர்.

(cs 24608) (N-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை கீரிமலை சந்தைக்கடை (கண்ணாடியினால் பிரிக்கப்பட்டு அடைக்கப்பட்ட பகுதி) வாடகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் 2023

வலிகாமம் வடக்கு பிரதேசசபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடையினை பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி | :- | 26.04.2023 தொடக்கம் 10.05.2023 பிற்பகல் 12.30 மணிவரை |
| கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் இறுதித்திகதி | :- | 10.05.2023 புதன்கிழமை பிற்பகல் 02.00 மணிவரை |
| கேள்விப் பத்திரம்திறந்து பரிசீலிக்கப்படும் திகதி | :- | 10.05.2023 புதன்கிழமை பிற்பகல் 02.30 மணி |

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியினை **செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை** எனும் முகவரிக்கு 10.05.2023 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். மறு பிரதியினை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்படல் வேண்டும்.

01. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் ஏதும் மீளளிக்கப்படமாட்டாது.
02. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
03. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.
04. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்விதாரரை காரணம் காட்டாது ஏற்கவோ/ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
05. இவ் வியாபாரநிலையங்களுக்கான மாதாந்த வாடகை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் தொகைக்கேற்ப சித்திபெறும் கேள்விதாரரிடமிருந்து பிரதேசசபையால் அறவிடப்படும். அத்துடன் காலத்திற்கு காலம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் வாடகை செலுத்தப்பட வேண்டும்.
06. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே கடை நடத்தப்படவேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். எனினும் வாடகைக்கு பெற்றவரின் இயலாமை, இறப்பு போன்ற காரணங்களினால் அவரது வாழ்க்கைத்துணை அல்லது அவரது வாரிசு நடத்த அனுமதிக்கப்படுவர்.
07. கடை கட்டடத்தில் புனரமைப்புவேலைகள், மாற்றங்கள், சேர்ப்புகள் எதுவும் சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
08. சித்திபெறாத கேள்விதாரரின் கேள்வி வைப்புப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கமுடியும்.
09. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் ஒருங்கிணைந்த கட்டுப்பணம் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் பிரதேசசபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியர்பார உரிமத்தினை பெற்று வியாபாரம் / தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
10. சித்திபெற்ற கேள்விதாரரால் பிரதேசசபைக்கு செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த கட்டுப் பணம் எச்சந்தர்ப்பத்திலும் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.
11. பெற்றுக்கொள்ளும் கடைகளில் ஏற்படும் பாதிப்புகளுக்கு குத்தகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
12. சித்தி பெறும் கேள்விதாரர் பிரதேசசபையால் அங்கீகரிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதோ, மதுபானவகைகளோ, போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்தபொருள்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன், கடைக் கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
13. வாடகைப்பணம் ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். தவறின் தண்டப்பணமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் மூன்று மாதங்கள் தொடர்ந்து செலுத்தத் தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படும்.
14. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை/ தகவல்களை **பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ** அல்லது 0212241130 தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

| விபரம் | பரப்பளவு (சதுரஅடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | மாத வாடகை | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு மீளளிக்கக் கூடியது |
|---|---|---|---|---|---|
| | மல்லாகம் | | | | |
| கீரிமலை சந்தை கடை (கண்ணாடியினால் பிரிக்கப்பட்டு அடைக்கப்பட்ட பகுதி) | 420 | 552,000.00 | 2,300.00 | 1,500.00 | 55,000.00 |

**திரு.சு.சுதர்ஜன்**
**உள்ளூர் அதி ா பெறுகைச்சபை,**
**வலிகாமம் வடக்குபிரதேச சபை,**
**காங்கேசன்துறை.**

**26.04.2023**

(cr.29721) (N.1)

## REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA

### INVITATION FOR BIDS
### Procurement of supply of Electrical goods

A. The Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, Works as specified following Tables.
   01) Electrical Equipment
   Bidding will be conducted through National Competitive Bidding Procedure

B. To be eligible for contract award the successful bidder shall not have been blacklist and shall need the following requirements
   01) Bidders shall have valid business registration
   02) Minimum 2 years of experience in supply of respective Works, Supplies and Service
   03) Bidder shall have manufacturer authorization for generators

C. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna Contact No (021 2222278/4557 ext 20), during the office hours and inspect the Bidding Documents at the same address any working days for 9.00am to 3.00pm except 12.30 to 13.30 hours

D. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a non refundable fee as specified in the table by cash on working days from 26.04.2023 to 18.05.2023 during 09.00 Hours to 15.00 Hours.

E. Bids must be delivered on or before 10.00 am of 18.05.2023 to the address given below in the tender box available at the Room of Additional Regional Director of Finance (TPM). Bids will be opened immediately after the closing of the bids in the presence of the bidders or their representatives.

F. Bid shall be valid for a remind 90 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 118days from the bid opening

G. Pre bid meeting Will be on 12.05.2023 at 10.00 am in RDHS Office Jaffna

H. Procument committee will be the right to make final decision in regard the accept or reject Bids

Table -1

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| Np/RDHS /LM/2023/EE/01 | Air Condition 18000 BTU | 07 | 2500.00 | 39,000.00 |
| NP/RDHS/PSSP/EE /2023/02 | Desk Top Computer | 11 | 2500.00 | 97,000.00 |
| | Lap top computer | 05 | | |
| | UPS | 12 | | |
| | Printer | 06 | | |
| NP/RDHS/PSSP/EE /2023/03 | HeavyDuty Photocopy Machine | 01 | 2500.00 | 76,000.00 |
| | Photocopy Machine | 08 | | |

**Chairman – Regional Procurement Committee**
**RDHS Office.**
**Jaffna.**

(CR/39722)AH-1

## இனிய வாழ்வு இல்லம், தேவிபுரம்

### ஆரோபணம் சிறுவர் நிதிய நிதி அனுசரணையுடன் ஆறுமாத தொழிற்பயிற்சியின் இறுதி நிகழ்வு

### கண்காட்சி விழா

**இடம் :**
**இல்ல மண்டபம்**
**காலம் :**
**28.04.2023 மு.ப. 9.00 மணி**
**தலைமை :**
**திரு. மி. யேசுறெஜினோல்ட்**
**- தலைவர் - இனிய வாழ்வு இல்லம்**
பிரதம விருந்தினர்:
**திரு. க. விமலநாதன்**
**- மாவட்டச் செயலாளர், முல்லைத்தீவு.**




* தோல் உற்பத்திப் பொருள்கள்
* ஆரிவேக் ஆக்கப் பொருள்கள்
* அழகுதரும் பூஞ்செண்டுகள்
* முக, தலை அலங்காரம்
* ஐசிங் கேக்
* தையல் பொருள்கள்

மாற்றுத் திறனுடைய மாணவரின் குறித்த பயிற்சியின் விளைவுகளை கண்டுகளிக்க அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

நிறைவேற்றுச் செயலணி,
இனிய வாழ்வு இல்லம், தேவிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி மார்க்கண்டு லலிதாதேவி

**தோற்றம்**
**25.03.1950**

**மறைவு**
**20.04.2023**

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு லலிதாதேவி கடந்த (20.04.2023) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், மஞ்சுளா, மதனகரன் (மதன்), மதிநிலா (மதி), கிருஷ்ணமதன், மகிந்தன் (சந்திரன்), மகிழினி (பாபா), இறஜிதா (ராஜி) ஆகியோரின் அன்புத் தாயும், பிரசாந்தன், யோனந்தன், மதிசன், விதுசன், அபிசன், டெனிடா, நீக்கிடா, யஸ்வின், அஸ்மிதா, அபிசேக், சக்தி, சக்திதா ஆகியோரின் பேர்த்தியும், சனேஸ், எல்லா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**
**மதன் : 0049 171 523 6602**
**மஞ்சுளா : 072 215 6547**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதையில் சாரத்தியம்

# மானிப்பாயில் இவ்வாரம் 25பேர் பொலிஸில் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஏப். 26

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், போதையில் சாரத்தியம் மேற்கொண்டமைக்காக கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 25 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புதுவருட விடுமுறைகளைத் தொடர்ந்து மானிப்பாய் பொலிஸார் கடந்த ஒருவார காலமாக முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கைகளின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மல்லாகம் நீதிமன்றத்தின் முற்படுத்தப்பட்டபோது தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இதையடுத்து குற்றவாளிகளுக்கு தலா 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-125)

# ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் உயிர்கொல்லிப் போதைப் பொருளான ஹெரோய்னுடன் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகத்துக்குரிய முறையில் நடமாடிய இளைஞனைச் சோதனையிட்டபோதே அவரிடமிருந்து 100 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)



*கொய்யாத்தோட்டம் இளைஞர் நற்பணிமன்றம் ஆரம்பமாகி மூன்றாவது வருட நிறைவை முன்னிட்டு நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய மண்டபத்தில் கடந்த 22ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. (ய-66)*

# பாதீட்டு அலுவலகம் அமைக்க அனுமதி

வரவு - செலவுத்திட்ட அலுவலகத்தை உருவாக்குவதற்கான சட்டவரைவை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம்நேற்றுமுன்தினம்மாலைநடைபெற்றது. இதன்போதே மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர்,

'நாடாளுமன்ற வரவு - செலவுத்திட்ட அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான சட்டவரைவைத் தயாரிப்பதற்காக கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது அனுமதி வழங்கப்பட்டது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டவரைவை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்குமான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது' என்று குறிப்பிட்டார். (ஓ-44)

## தமிழர்...

ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகளும், சிவில் சமூக அமைப்புக்களும், பொதுஅமைப்புக்களும் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன. அரசியல் கட்சிகளின் பிரமுகர்களும், சமூக ஆர்வலர்களும், இளைஞர்களும் இணைந்து இந்த பொதுமுடக்கம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் தெளிவுபடுத்தல்களை வழங்கியிருந்தனர். இதன்படி தமிழர் தாயகத்தில் பொதுமுடக்கம் காரணமாக நேற்று இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள், சந்தைகள், சிகையலங்கார நிலையங்கள், உணவகங்கள் உள்ளிட்ட பல வணிக மற்றும் வியாபார ஸ்தாபனங்களும் நேற்றையதினம் பூட்டப்பட்டிருந்தன. தனியார் போக்குவரத்துச் சேவை இடம்பெறவில்லை. எனினும், இலங்கைப் போக்குவரத்துச் சேவையினர் பணியில் ஈடுபட்டனர். மருந்தகங்களின் அவசியத் தன்மை கருதி அவை திறக்கப்பட்டிருந்தன. பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு ஏராளமான மாணவர்கள் செல்லவில்லை. அவை சம்பிரதாயபூர்வமான இயங்குநிலையையே கொண்டிருந்தன. இதேவேளை வெகுசில வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தமையையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஒப்பீட்டளவில் சுமார் 90 வீதமான வணிக வளாகங்களும், சந்தைகளும், வர்த்தக நிலையங்களும் பூட்டப்பட்டே இருந்தன.

(அ-ம-125,9,131)

**(படங்கள் 6ஆம் பக்கத்தில்)**

## மின்னல்...

கீரிசுட்டான் பகுதியில் மின்னல் தாக்கி வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்தார். இந்தத் துயரச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

பத்மநாதன் தெய்வானை (வயது-62) என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்தவராவார். சம்பவ இடத்துக்குச் சென்ற மடு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ-ம-18)

## தந்தை...

நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. நினைவுத்தூபி திரை நீக்கப்பட்டதையடுத்து தீபச்சுடர் ஏற்றுதல், மலர் அஞ்சலி, தீப ஆராதனை, ஜெப ஆராதனை இடம்பெறும் என ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (அ-ம)

## சா/த. பரீட்சை...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்துவதில் தற்போது ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக சாதாரணதரத்துக்குத் தோற்றவுள்ள 6 லட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் உயர்தரத்துக்கு முன்னேறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அத்துடன், இந்த வருடம் க.பொ.த. பரீட்சையை நடத்துவது தொடர்பில் பரிசீலிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றேன். இந்த வருடம் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையை நடத்தாமல் அனைத்து மாணவர்களையும் உயர்தரத்தைத் தொடர்வதற்குத் தகுதியுடையவர்கள் என்று அறிவித்தால் அது நல்லதொரு திட்டமாக அமையும். கொவிட் காலத்தில் பிரிட்டனில் இவ்வாறானதொரு முடிவு எடுக்கப்பட்டது. அதனால் மாணவர்கள் எவரும் பாதிக்கப்படவில்லை. மாறாக மாணவர்களுக்குச் சலுகைகளே கிடைத்தன - என்றார். (அ-ம)

## பயங்கரவாத...

கொள்ளப்பட்டு எதிர்ப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அந்தச் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை அரசு தாமதப்படுத்தியுள்ளது.

மேற்படி சட்டவரைவு முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் இந்த வாரம் சமர்ப்பிக்கப்படும் என்று முன்னதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சர் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் அந்த முடிவு மாற்றப்பட்டு சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை தாமதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-ம-44)

## போதை...

கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலிலேயே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் 21 வயதான அவரிடமிருந்து 58 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-23)

## எரிபொருள்...

யில் மாற்றம் இல்லாமல் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்குமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கடந்த வாரம் வரை எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டதுடன், பின்னர் மேலும் ஒரு வாரத்துக்கு இந்தக் கூடுதல் ஒதுக்கீடு நீடிக்கப்பட்டது. இந்த நிலையில், ஒதுக்கீட்டு அதிகரிப்பை மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது ஓட்டோக்களுக்கு 5 லீற்றரில் இருந்து 8 லீற்றராகவும், மோட்டார் சைக்கிள்களுக்கு 4 லீற்றரில் இருந்து 7 லீற்றராகவும், பஸ்களுக்கு 40 லீற்றரிலிருந்து 60 லீற்றராகவும், கார்களுக்கு 20 லீற்றரிலிருந்து 30 லீற்றராகவும், மண் அகழ்வு வாகனங்களுக்கு 15 லீற்றரில் இருந்து 25 லீற்றராகவும், பாரவூர்திகளுக்கு 50 லீற்றரிலிருந்து 75 லீற்றர் வரையும் எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## நெடுந்தீவுப்...

காயங்களை ஏற்படுத்தி, நகைகளை கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் கைதான சந்தேகநபரை எதிர்வரும் 9ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஜே.கஜநிதிபாலன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை நெடுந்தீவு இறங்குதுறைக்கு அருகிலுள்ள வீடொன்றில் இருந்து ஐந்து முதியவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டதுடன், 100 வயதான மூதாட்டி படுகாயங்களுடன் மீட்கப்பட்டு, யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார். இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், கொலைகள் இடம்பெற்ற வீட்டில் இரண்டு தினங்களுக்கு முன்பிருந்து தங்கியிருந்த நபரை சந்தேகநபராகக் கைதுசெய்திருந்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில், சந்தேகநபர் வெளிநாடொன்றில் வசித்துவந்த நிலையில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அந்த நாட்டிலிருந்து, இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டவர் எனவும், அவரிடமிருந்து கொல்லப்பட்டவர்களின் உடைமைகள் மற்றும் நகைகள் உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளன எனவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், சந்தேகநபரை 48 மணித்தியாலங்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரிப்பதற்கும் நீதிமன்றத்தின் அனுமதி பெற்றனர்.

இதையடுத்து, நேற்றுமுன்தினம் சந்தேகநபரை சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்கு அழைத்துச் சென்ற பொலிஸார் அங்குவைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டதுடன், கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கத்தி மற்றும் கொலைசெய்யும்போது சந்தேகநபர் உடுத்திருந்த சாரம் என்பவற்றையும் வீட்டின் கிணற்றில் இருந்து மீட்டனர். அத்துடன், பொலிஸாரின் மேலதிக விசாரணைகளும் முடிவடைந்தன. இதன் தொடர்ச்சியாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் சந்தேகநபரை பொலிஸார் நேற்று முற்படுத்தினார்கள். இதையடுத்து அவரை எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(அ-ம-26)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## Room வாடகைக்கு

மருதனார்மடம் Training College இற்கு அருகாமையில் Room வாடகைக்கு உண்டு.
ஒருவருக்கு 3.000 ரூபா
(பெண்களுக்கு மட்டும்.)
தொடர்பு: 077 9574 580


## வேலையாள்கள் தேவை

பூக்கன்றுகள் விற்பனை நிலையத்துக்கு ஐந்து நபர்கள் வேலைக்காகத் தேவை.
உடன் தொடர்புகளுக்கு:-
075 944 4601
(CS24589)A11-1

## காணி விற்பனைக்கு உண்டு

* யாழ்ப்பாணம் புத்தூரில் 27 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
* நன்னீரூற்று
* குடியிருப்பு சூழவுள்ள பகுதி

பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
(முழுக்காணி களும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).
(ஒரு பரப்புக் காணியின் விலை மூன்று இலட்சம் ( 300,000/- )



தொடர்பு:
077 4683 354
076 9119 371
076 7390 413

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)
* யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
* 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீரூற்று நிலம்
* விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
* குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
* பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
* சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்
* 1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும் (120,000/=)

பார்வையிடும் நேரம் : காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை
தொடர்பு:-076 755 8606 077 638 5683

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A-9 பிரதான வீதியுடன் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு
- ✔ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✔ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ✔ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ✔ ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

பார்வையிடும் நேரம்:-
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.
தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு
- ✔ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✔ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✔ காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- ✔ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✔ ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.
தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457
(CS 24346) (J-1) (CS 24547)A-1


# நாட்டை நாசமாக்கியோரில் பஸிலும் முதன்மையானவர்

கொழும்பு, ஏப். 26

கோத்தாபய ராஜபக்சவுடன் சேர்ந்து நாட்டை நாசமாக்கியவர்களில் பஸில் ராஜபக்சவும் முக்கியமான பங்கு வகிக்கின்றார் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ‘கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக்குவதற்கு நாம் முடிவெடுத்தபோது அவர் தோல்வியடைந்த இயலாத தலைவராக இருக்கவில்லை. மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக அவருக்குக் கொடுத்த பணிகளை வெற்றிகரமாக செய்து முடித்தார்.

ஆனால், கோத்தாபய ஜனாதிபதியானவுடன் பி.பி.ஜயசுந்தர, மிலிந்த மொரகொட, அமெரிக்கத் தூதுவர் மற்றும் பஸில் ராஜபக்ச என எல்லோரினதும் வலையிலும் வீழ்ந்துவிட்டார். இறுதிக் காலத்தை அமெரிக்காவில் கழிக்கவேண்டும் என்பதுதான் கோத்தாபயவின் திட்டம்.

அதற்காக அமெரிக்காவைச் சந்தோஷப்படுத்த வேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டது. அமெரிக்கா இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுத்து இறுதியில் நாட்டை நாசமாக்கிவிட்டார். அவருடன் சேர்ந்து நாட்டை நாசமாக்கியவர்களில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச முக்கியமானவர் - என்றார். (ம-22)


## வீடு விற்பனைக்கும் வாடகைக்கும் உண்டு

சுதுமலையில் யாழ்.நகருக்கு அண்மையாக 3 அறைகள். Attach Bathroom, வெளிப்புற Bathroom, 3 Toilet, 2 Halls, மேல்மாடி சுற்றுமதில். நன்னீர் வசதியுடனான கௌரவமான குடும்பத்தவர்களது வீடு விற்பனைக்குண்டு. (தரகர்கள் தொடர்பு கொள்ளலாம்)
(மேல்மாடி பகுதி படிக்கும் மாணவர்களுக்கு அல்லது சிறிய குடும்பத்துக்கு வாடகைக்குண்டு)
தொடர்பு :- ஆனந்தன்
074 000 9644, +1647 607 9624 (whatsapp) , 074 031 9808

## உதவியாளர் தேவை

வல்வை வீதி, சங்கானையில் வசிக்கும் 68 வயதுடைய பயந்த சுபாவமுள்ள, கவலை, மன அழுத்தம் மற்றும் பிந்தைய மன உளைச்சல் சீர்கேடு (PSTD) ஆகிய காரணிகளால் பாதிக்கப்பட்ட பெண்ணை வீட்டிலிருந்து பராமரிக்கக்கூடிய மருத்துவ நியமனங்களுக்கு கூட்டிச் செல்லக்கூடிய அனுபவமுள்ள உதவியாளர் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. தங்க தனியறை மற்றும் மூன்று வேளை உணவு இலவசம். தகுந்த சம்பளம் மற்றும் ஊக்கத்தொகையும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
தரன் - தொலைபேசி - 071 805 4277
ஜினோ - வாட்ஸ்ஆப் - +447 9465 23993
(cs24607) N-1,7

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார்.

- சுத்திகரிப்பாளர்
- அலுவலக உதவியாளர்
  தகைமை : A / L மற்றும் 1 வருட அனுபவம்
- அழகுக்கலை, தையல், கேக் ஐசிங் மற்றும் ஆரி எம்பிராய்டரி பயிற்சிகளுக்கான.....
  1. உதவி ஆசிரியர்கள்
     தகைமை : A / L மற்றும் மேற்படி துறையில் Diploma
  2. பயிற்சி ஆசிரியர்கள்
     தகைமை : A / L, மேற்படி துறையில் Diploma அல்லது NVQ 4 மற்றும் 2 வருட அனுபவம் / 1 வருட அனுபவம்

மேற்படி துறைகளில் தகைமை உடையவர்கள் (பெண்கள்) கல்வி மற்றும் ஏனைய துறை சார் தகைமை சான்றிதழ்களின் பிரதிகள் அடங்கிய சுயவிபரக்கோவையினை கீழ் உள்ள கல்லூரி முகவரிக்கு பதிவுத்தபாலில் விண்ணப்பிக்கும் பதவியினை இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 03.05.2023 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும். தகைமை உடையவர்கள் நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவுசெய்யப்படுவார்கள்.

YICSD COLLEGE
Yarl International College Of Skills Development
இல. 307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(கன்னாதிட்டி சந்தி அருகில்)




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org